DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.363/2022**

Deposition of witness for Prosecution அ.சா.5

| | | |
|---|---|---|
| பெயர் | : | காந்தி பிச்சை |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | செல்லையா |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 11.03.2026

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு சார்பு ஆய்வாளர் திரு.பாலமுருகன் அவரையும் அவருடைய கையொப்பத்தையும் நன்கு தெரியும். அதனால் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். அ.சா.1 கொடுத்த புகார் மனுவை பெற்று முதல் தகவல் அறிக்கை கு.எண்.75/2021, இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1)ன்படி பதிவு செய்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அதன்பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.3 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 நபர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் காயம் பட்ட சாட்சிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி.சர்மிளாவை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். **(அ.சா.1ன் விபத்து பதிவேடு மற்றும் அதன்பின்புறம் காயத்தின் தன்மை குறித்து கருத்துரை வழங்க இயலாது என்று அளித்த சான்றிதழ் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது 15.06.2021ம் தேதி இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1)ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கையை சார்பு ஆய்வாளர் பதிவுசெய்துவிட்டார் என்றால் சரியல்ல. சம்பவ சாட்சிகளை சம்பவ இடத்தில் விசாரிக்காமல் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்துள்ளார் என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கை சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்றஇறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.